# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 18.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 2521/D/2020 & SA 2734/D/2020**

திரு அ.உதயணன் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
ராஜா நடுநிலைப்பள்ளி, கழுநீர்க்குளம், --- பொது அதிகார அமைப்பு
தென்காசி மாவட்டம்.

பார்வை:

| | SA 2521/D/2020 & SA 2734/D/2020 |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 05.10.2019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 21.10.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.11.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 29.02.2020 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (18.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு அ.உதயணன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திருமதி S. புஷ்பம், தலைமையாசிரியர், ராஜா நடுநிலைப்பள்ளி, கழுநீர்க்குளம், தென்காசி மாவட்டம் ஆகியோர் தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் பாவூர்சத்திரம் கீழப்பாவூர் வட்டாரக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுக்களில், கீழப்பாவூர் கல்வி வட்டாரத்திற்கு உட்பட்ட கழுநீர்குளம் ராஜா நடுநிலைப்பள்ளியின் தற்போதைய கல்வி முகமைக்கு முதன்மைக் கல்வி அலுவலர் வழங்கியுள்ள ஏற்பளிப்பின் சான்றொப்பமிட்ட நகல், மேற்காண் பள்ளியின் தற்போதைய கல்வி முகமை முதன்மைக் கல்வி அலுவலரின் ஏற்பளிப்பு வேண்டி சமர்ப்பித்த விண்ணப்பம் மற்றும் அதன் இணைப்புகள் ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல், முதன்மைக் கல்வி அலுவலர் மேற்காண் பள்ளியின் தற்போதைய கல்வி முகமைக்கு

ஏற்பளிப்பு வழங்கும் முன் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஏற்பு பெற்ற தனியார் பள்ளிகள் வரன் முறைச் சட்டத்தின் 8(2)(அ) பிரிவின் கீழ் விசாரணை ஏதேனும் மேற்கொண்டு இருந்தால் அது குறித்த விவரம் மற்றும் அவ்விசாரணை தொடர்பான ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல் உள்ளிட்ட விவரங்களை ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் ஒரே பொருள் குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(1)-ன் கீழ் தனித்தனியே தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தமது இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை மேற்குறிப்பிட்டவாறு தனித்தனியே இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களும் இன்று (18.11.2020) ஒருசேர தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தான் கீழ்க்கண்டவாறு கோரிய தகவல்களை வட்டாரக்கல்வி அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு கோரினார் :

(a) கீழப்பாவூர் கல்வி வட்டாரத்திற்கு உட்பட்ட கழுநீர்குளம் ராஜா நடுநிலைப்பள்ளியின் தற்போதைய கல்வி முகமைக்கு முதன்மைக் கல்வி அலுவலர் வழங்கியுள்ள ஏற்பளிப்பின் (approval) சான்றொப்பமிட்ட நகல்.

(b) மேற்காண் பள்ளியின் தற்போதைய கல்வி முகமை முதன்மைக் கல்வி அலுவலரின் ஏற்பளிப்பு வேண்டி சமர்ப்பித்த விண்ணப்பம் மற்றும் அதன் இணைப்புகள் ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல்.

(c) முதன்மைக் கல்வி அலுவலர் மேற்காண் பள்ளியின் தற்போதைய கல்வி முகமைக்கு ஏற்பளிப்பு வழங்கும் முன் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஏற்பு பெற்ற தனியார் பள்ளிகள் வரன் முறைச் சட்டத்தின் 8(2)(அ) பிரிவின் கீழ் விசாரணை ஏதேனும் மேற்கொண்டு இருந்தால் அது குறித்த விவரம் மற்றும் அவ்விசாரணை தொடர்பான ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள் அனைத்தும் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் இருக்கின்ற தகவல்கள் தான், ஆனால் இவற்றை கழுநீர்க்குளம் ராஜா நடுநிலைப் பள்ளிக்கு மாற்றி அனுப்பியது தவறான செயல் ஆகும். எனவே, தங்கள் அலுவலகத்தில் இருக்கின்ற ஆவணங்களை மனுதாரருக்கு தகவல்களாக வழங்க தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் வட்டாரக்கல்வி அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது. மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களின்மீது நடவடிக்கை எடுக்காமல் தேவையற்ற காலதாமதம் செய்வது அல்லது மனுதாரரை அலைகழிப்பது போன்ற செயல்களை செய்வது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்படி சட்டவிரோதமான செயல் ஆகும். எனவே, வட்டாரக்கல்வி அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 20(1) மற்றும் சட்டப்பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை எடுக்க ஏன் அரசுக்கு பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் வட்டாரக்கல்வி அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA 2521/D/2020 & SA 2734/D/2020**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

1. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
ராஜா நடுநிலைப்பள்ளி, கழுநீர்க்குளம்,
தென்காசி மாவட்டம்.

2. பொதுத் தகவல் அலுவலர் /
வட்டாரக்கல்வி அலுவலர்,
வட்டாரக்கல்வி அலுவலகம்,
கீழப்பாவூர், தென்காசி மாவட்டம்.

**மனுதாரர்:-**

திரு அ.உதயணன்,
எண்.3/222, பாரதியார் தெரு,
கழுநீர்குளம் - 627 861,
திருநெல்வேலி மாவட்டம்.

Copy to: File
SNPA 20.11.2020